சுபம்:



ஸ்ரீவராஹமிஹிராசாரியரால் செய்யப்பட்ட

## ॥ अङ्ग विद्या ॥

# அங்கவித்யா

[தமிழ் உரையுடன்]

*

இச்சிறந்த உரை, மஹாமஹோபாத்யாய வேதாந்த கேஸரி, பைங்காணுடு ப்ரம்மஸ்ரீ கணபதி சாஸ்திரிகள் அவர்களின் முக்கிய சிஷ்யரும், வியாகரண வேதாந்த சாஸ்திர பாரங்கதரும், சோதிட மந்திர சாஸ்திர வித்வானும், ஆர்யமத ஸம்வர்த்தினி பத்திராதிபருமான

ப்ரம்மஸ்ரீ கடலங்குடி

**நடேச சாஸ்திரிகள் அவர்களால்**

இயற்றப்பட்டு

சேலம் லிட்டரரி அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு,
சென்னையில் பிரசுரம் செய்யப்பட்டது.

*

முதற் பதிப்பு

1956

காப்பிரைட்] [விலை ரூ. 1—4—0

ॐ नमो भगवते राधाकृष्णाय।



# ॥ अङ्ग विद्या ॥

# அங்கவித்யா

## முகவுரை

பொதுவாய் ப்ரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் என ப்ரமாணங்கள் மூன்றாகும். அவற்றுள் ப்ரத்யக்ஷத்தாலும் அனுமானத்தாலும் எது அறிய முடியாததோ அப்பொருளை எது உபதேசிக்கிறதோ அது ஆகமமாகும். ஆகமத்துள் சிறந்தது வேதமாகும். அந்த ஆகம சிரேஷ்டமான வேதத்துக்கு “शिक्षा—சிக்ஷை, व्याकरणम्—வியாகரணம், कल्पः—கல்பம், निरुक्तः—நிருக்தம், ज्योतिषम्—ஜ்யோதிஷம், छन्दः—சந்தஸின் லக்ஷணம்” என ஆறு அங்கங்களுண்டு. இவைகளை அங்கங்களாகவுடைய வேதம் அங்கியாகிறது. ஆகவே இந்த வேதமாகிற அங்கிக்கு—

शब्दशास्त्रं मुखं ज्योतिषं चक्षुषी
श्रोत्रमुक्तं निरुक्तं च कल्पः करौ।
या तु शिक्षाऽस्य वेदस्य सा नासिका
पादपद्मद्वयं छन्द आद्यैर्बुधैः॥

என்றபடி, சப்த சாஸ்திரம் முகமாகும். ஜ்யோதிஷம் கண்களாகும். (யாஸ்காரால் செய்யப்பட்ட) நிருக்தம் சுரோத்திரமாகும். கல்பமானது கைகளாகும். சிக்ஷை யென்பது நாஸிகையாகும். சந்தஸ்ஸானது இரண்டு கால்கள் ஆகும் என ஆதியிலுள்ள பெரியார் கூறுகின்றனர். மேலும்,

"वेदचक्षुः किलेदं भवेज्ज्यौतिषं
मुख्यता चाङ्गमध्येऽस्य तेनोच्यते ।
संयुतोऽपीतरैः कर्णनासादिभि —
श्चक्षुषाऽङ्गेन हीनो न किञ्चिन्नरः ॥"

என்றபடி, "இந்த ஜ்யோதிஸ் சாஸ்திரமானது வேத புருஷனுடைய கண்ணாகும். ஆனதுபற்றி ஏனைய அங்கங் களுள் (வியாகரணம் முதலியவற்றுள்) ஜ்யோதிஷ மென்ற அங்கம் முக்கியமாகிறது. புருஷன், மற்ற அங்கங்களுடன் கூடினவனாயினும், 'கண்' என்ற அங்கமில்லாவிடில் அவனு லொன்றும் செய்யவியலாதன்றோ" என்று சொல்லியிருக் கின்றனர்.

"तस्माद् द्विजैरध्ययनीयमेतत्
पुण्यं रहस्यं परमं च तत्वम् ।
यो ज्यौतिषं वेत्ति नरः स सम्यक्
धर्मार्थ मोक्षान् लभते यशश्च ॥"

ஆகவே, மனிதன் புண்யமும், ரஹஸ்யமும், பரமபவித்ர முமான ஜ்யோதிஸ்தத்துவ சாஸ்திரத்தை அத்யயனம் செய் தல் அவசியமாகிறது. எவன் இதை அறிவானே அவன்

தர்மார்த்த மோக்ஷங்களேயுமடைவான். கால புருஷனுடைய கண்ணுன இந்த சாஸ்திரமானது 'கணிதம்', 'ஜாதகம்' 'சாகை' என மூன்று தனித்தனி பிரிவுகளேயுடையது. இம் மூன்று படங்கினது "ஸம்ஹிதை" எனப்படும். அது விஷயமாக, அவந்தி தேச வாசியும், 'ஆதித்யதாஸன்'என்பவரின் புத்ரருமான "ஸ்ரீவராஹமிஹிராசாரியர்" 'கணிதஸ்கந்த' விஷயமாய் "सूर्यसिद्धान्तम्" "சூரிய ஸித்தாந்தம்" என்ற கிரந்தத்தையும், 'ஜாதக ஸ்கந்த' விஷயமாய் बृहद्-जातकम्" — "பிருஹத் ஜாதகம்", "लघुजातकम्" — "லகு ஜாதகம்" என்ற கிரந்தங்களேயும், செய்து, "बृहत्संहिता" — "பிருஹத் ஸம்ஹிதை" என்ற ஸம்ஹிதா கிரந்தத்தையும் செய்திருக்கிருர். இந்த ஸம்ஹிதா கிரந்தத்தில் 50-வது அத்தியாயம் அங்க வித்யை என்பது. ப்ரச்னம் செய்யுங்கால் அவன் தனது அங்கங்களேத் தொடுவதின் மூலம் காணவேண்டிய சுபாசுப பலஞ்களேப் பற்றிய அறிவு உபதேசிக்கப்படுவதால் இந்த அத்தியாயத்திற்கு "अङ्गविद्याऽध्यायः" — "அங்கவித்யாத்யாயம்" எனப்பெயரிடப்பட்டது.

இந்த அத்தியாயத்தில் 44 சுலோகங்களிருக்கின்றன. அவற்றுள்:—

1-வது சுலோகத்தில் — அங்கவித்யையின் பயன்
2 „ „ — ப்ரஷ்டா இருக்குமிடத்தைக் கொண்டு சுபாசுப பலன் அறியும் முறை
3, 4, 5 „ „ — அசுபஸ்தானமின்னதென்பது

6, 7 -வது சுலோகம் — திக்கு, காலம் இவற்றின் லக்ஷணம்

8, $8\frac{1}{2}$ ,, ,, — சரீரத்தில் இன்னின்ன பாகம் புருஷன், இன்னின்ன பாகம் ஸ்த்ரீ என்பது

9, 10 ,, ,, — நபும்ஸகாங்கம் இன்னின்னதென்பது

11 ,, ,, — சரீரத்திலுள்ள அங்கத்தைத் தொடுதலால் தனித்தனியே காண வேண்டியது

12 ,, ,, — தனது மார்பைத் தொட்டுக் கொண்டு ப்ரச்னம் செய்தலால் ஒன்றின் பிரிதலேற்படும் என்பது

13 ,, ,, — க்ஷேத்திர சிந்தை தாஸீ சிந்தை முதலியன

14 ,, ,, — வஸ்திரத்தைப் பற்றிய சிந்தை

15, 16 ,, ,, — ப்ரச்ன காலத்தில் எதிரில் காணப் பட்ட வஸ்துவைக்கொண்டு இன்னின்ன வற்றைப் பற்றிய சிந்தை என்பது

17 ,, ,, — ப்ரச்னம்செய்பவரின் கையிலுள்ள வற்றைக்கொண்டு சிந்தை இன்னதென்பது

18 ,, ,, — குடும்ப விருத்தி, ஸுஹ்ருத் விநாசம் இவற்றை யறிதல்.

19-வது சுலோகத்தில் — கம்பளி, பணம், வெண்பட்டு, சந்தனம், ஆபரணம் இவற்றின் லாபமறிதல்

20 ,, ,, — வெளிதேசம் போயிருப்பதைப் பற்றிய சிந்தை

21 ,, ,, — திருடன், ஸேனுபதி, வியாபாரி, தேவரடியாள், கடையிலுள்ள செட்டி, கொலையாளி இவர்களைப் பற்றிய சிந்தை

22 ,, ,, — கேட்பவன் மனத்தில் வெளியில் சென்றிருப்பவனைப் பற்றியும், கள் விற்பவனைப் பற்றியும், பசு பால னத்தைப் பற்றியும், பிச்சைக் காரனைப் பற்றியும் எண்ணியிருக் கிருன் எனவறிதல்

23 ,, ,, — அவிபக்த குடும்ப சிந்தை

24 ,, ,, — திருடரைப் பற்றிய கேள்வியா பந்துவைப் பற்றியதா என்பதை யறிதல்

25 }
26 } ,, ,, — திருடனைக் காணும் முறையை உபதேசித்தல். அதாவது திருடர் இன்னின்னுபென்பது

27 }
28 } ,, ,, — திருட்டுப்போனபொருள் கிடைக் கும் அல்லது கிடைக்காது என் பதை யறிதல்

28½ ,, ,, — வியாதிபீடிதர் மரிப்பரா, பிழைப் பரா என்பதை அறிதல்

| | | | |
|---|---|---|---|
| 29 முதல் 35 வரை | சுலோகத்தில் | — | கேட்பவர் எதைச் சாப்பிட்டார் என்பதை உபதேசித்தல் |
| 36 | ,, | ,, — | கர்ப்பிணியின் சுகப்ரஸவம், பிறக்கும் குழந்தை ஆண், பெண், அலி இவற்றை யறிதல் |
| 37 | ,, | ,, — | எப்பொழுது கர்ப்பம் ஏற்படும் என்பதை யறிதல் |
| 38 | ,, | ,, — | கர்ப்பம் கலைந்துபோகுதலையறிதல் |
| 39 | ,, | ,, — | கர்ப்பமுண்டாகும் காலம் |
| 40, 41 | ,, | ,, — | எத்தனை குழந்தை பிறக்குமென்பது |
| 42, 43 | ,, | ,, — | கர்ப்பிணி எந்தெந்த நக்ஷத்திரத்தில் ப்ரஸவிப்பாள் என்பதை யறிதல் |
| 44 | ,, | ,, — | க்ரந்த ஸமாப்தி |

இவ்விதமாக இந்த கிரந்தம் முடிவு பெறுகிறது. ஆகவே இதிலுள்ள 44 (நாற்பத்து நான்கு) சுலோகங்களையும் ஒருவன் மனப்பாடம் செய்துகொண்டு இஷ்டதேவதா த்யானத்துடன் பலன் சொல்லுவான் ஆனுல் அவன் சொல்லுவது ஒருபொழுதும் வீண்போகாது என்பது நிச்சயம்.

ஓம் தத் ஸத்.

17/2 நடேசய்யர் தெரு,
தியாகராயநகர்,
சென்னை—17.

கடலங்குடி
நடேச சாஸ்திரிகள்.

## சரீரத்தில் புருஷாங்கங்கள்

1. ऊरू = தொடை
2. ओष्ठौ = உதடுகள்
3. स्तनौ = முலைகள்
4. वृषणौ = காய்கள்
5. पादौ = கால்கள்
6. दशनाः = பற்கள்
7. भुजौ = பாகுக்கள்
8. हस्तौ = கைகள்
9. गण्डौ = கன்னங்கள்
10. कचाः = கேசங்கள்
11. गलम् = கழுத்து
12. नखाः = நகங்கள்
13. अङ्गुष्ठौ = கைகால், கட்டை விரல்கள்
14. सशङ्खं कक्षांसम् | சங்க(வளை)த் துடன் கூடிய கக்கங்கள்
15. अंसौ = தோள்கள்
16. श्रवणौ = காதுகள்
17. गुदम् = மலம் வெளிவரு மிடம்
18. सन्धी = எல்லா அங்கங் களிலுமுள்ள பூட்டுகள்

இவை आशु फलप्रदानि।

## சரீரத்தில் ஸ்த்ரீ அங்கங்கள்

1. भ्रूः = புருவங்கள்
2. नासा = மூக்கு
3. स्फिजौ = ஆண் குறிக் கும் குதத்திற்கும் நடு விடம்
4. वलिः = வயிற்றிலுள்ள மூன்று மடிப்பு
5. कटिः = பெண் குறி
6. सुलेखाः = கை நடுவி லுள்ள கோடுகள்
7. अङ्गुलिचयः = விரல் களின் கூட்டங்கள்
8. जिह्वा = நாக்கு
9. ग्रीवा = கழுத்து
10. पिण्डिके = முட்டிக்காலின் பின் பங்கங்கள்
11. पाष्णियुगम् = நுனிக் கால்கள்
12. जङ्घे = முழங்கால்கள்
13. नाभिः = உந்தி
14. कर्णपाली = காதுகள்
15. कृकाटी = குழுத்துப் பின்முழி

இவை विलम्बित् फलदानि।

## சரீரத்தில் நபும்ஸகாங்கங்கள்

1. वक्त्रम् = முகம்
2. पृष्ठं = பின் பக்கம்
3. जत्रुः = மார்புக்கும் கக்கத்துக்கும் ஸந்தி
4. जानुनी = முழங்கால்கள்
5. अस्थीनि = எலும்புகள்
6. पार्श्वे = பக்கங்கள்
7. हृत् = ஹ்ருதயம்
8. तालु = முகத்தின் பின்பாகம்
9. अक्षी = கண்
10. मेहनम् = ஆண் குறி
11. उरः = மார்பு
12. त्रिकम् = கடியின் பின் பக்கம்
13. शिरः = தலை
14. ललाटम् = நெற்றி

இவை फलशून्यानि ।

रूक्ष क्षतैः भग्न कृशैश्च पूर्वैः न सिद्धिर्भवति ॥

---

20, 21-வது பக்கத்தில் சொல்லியவற்றின் விளக்கம்:—

| ராசிகள் | அதிபதி | அவன் திக்கு | ப்லவங்கள் |
|---|---|---|---|
| மேஷத்துக்கும் விருச்சிகத்திற்கும் | அங்காரகன் | தெற்கு | மேஷமும் விருச்சிகமும் } ப்லவங்களாகும் |
| விருஷபத்துக்கும் துலாத்துக்கும் | சுக்கிரன் | ஆக்நேயீ திக் தென்கிழக்கு | விருஷபமும் துலாமும் } இங்கு ப்லவம் |
| மிதுனத்துக்கும் கன்னிக்கும் | புதன் | வடக்கில் | மிதுனமும் கன்னியும் \| இங்கு ப்லவம் |
| கடகத்திற்கு | சந்திரன் | வட மேற்கு | கடகம் — இங்கு ப்லவம் |
| சிங்கத்திற்கு | சூரியன் | கிழக்கு | சிங்கம் — இங்கு ப்லவம் |
| தனுசுக்கும் மீனத்துக்கும் | குரு | வட கிழக்கு | தனூர் மீனங்கள் — இங்கு ப்லவங்களாகும் |
| மகரத்துக்கும் கும்பத்துக்கும் | சனி | மேற்கு | மகர, கும்பங்கள் இங்கு ப்லவமாகும் |

இதிலிருந்து உதயமான ராசி, அதற்குரிய நக்ஷத்திரங்கள் இவற்றைக்கொண்டு திருடப்பட்டும், நஷ்டப்பட்டும் போன பொருளிருக்குமிடத்தைக் காண்க.

# முக்கிய அறிவிப்பு

—*—

இந்தப் புஸ்தகத்தின் முதல் பதிப்பு செய்யும் விஷயத்தில் எம்மைத் தூண்டியும் பலவழியிலும் இதற்கு உதவி செய்தவளுமான எனது ஐந்தாவது பெண் **K. N. ஸரஸ்வதி B. A.,** க்கு இப்புஸ்தகம் அச்சிடும் விஷயமாய் நேர்ந்த செலவுபோக மீதம் புஸ்தகம், விற்றுவரும் ரூபாயையும் இந்தப் பதிப்பின் காபிரைட்டையும் என் ஜீவித காலத்திலேயே கொடுத்திருக்கிறேன். மற்ற நான்கு பெண்களுக்கும் இதில் யாதும் சம்பந்தம் இல்லை என்பதையும் தெரிவிக்கிரோம்.

இப்பதிப்பில் ஸ்வல்ப காபிகளே அச்சிடுவதால் தேவைக்கு முந்துவது நலம்.

இப்படிக்கு,

(ஒப்பம்) **கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,**

*17|2, நடேசய்யர் தெரு,*

*தியாகராயநகர், மதராஸ் — 17.*

*15—5—1956.*

சுபம்.



गोपाल तत्व रक्षामणिः, अभिनवव्यासः, कुलपतिः,
अभिनवशुकब्रह्म, ज्यौतिषिकः

# कडलङ्गुडि नटेशशास्त्री

व्याकरण वेदान्तशास्त्र पारङ्गतः, भागवत भगवद्गीतोपन्यासकः
ब्रह्मसूत्रशाङ्करभाष्यादि वेदान्तग्रन्थानां, बृहज्जातकादि ज्योतिर्ग्रन्थानां,
श्रीमद्भागवतस्य च द्रामिड भाषानुवादसम्पादकः,
आर्यमतसंवर्द्धनी पत्रिका सम्पादकश्च ॥

ॐ नमो भगवते राधाकृष्णाय ।

# ॥ अङ्ग विद्या ॥

# அங்க வித்யா

அவதாரிகை:— முதலிலேயே அங்கவித்யையின் பயன் சொல்லப்படுகிறது:—

मूलम् । श्लोकः —

दैवज्ञेन शुभाशुभं दिगुदितस्थानाऽऽहृतानीक्षता
वाच्यं प्रष्टृनिजापराङ्गघटनां चालोक्य कालं धिया ।
सर्वज्ञो हि चराचरात्मकतयाऽसौ सर्वदर्शी विभु
श्चेष्टा व्याहृतिभिः शुभाशुभ फलं सन्दर्शयत्यर्थिनाम् ॥ १ ॥

(பதவுரை) **चराचरात्मकतया** = அசையும் பொருளான ஜந்துக்களுக்கும், அசையாப் பொருளான மரம் முதலிய வற்றுக்கும் ஆத்மாவாக (ஜீவ பூதமாக) இருப்பதுபற்றி **सर्वज्ञः** = விசேஷித்து எல்லாமறிந்ததாகவும் **विभुः** = எங்கும் நீக்கமற நிறைந்ததாகவும் இருக்கிற **असौ** = இந்தக் *கால மானது **हि** = யாது காரணத்தினால் **चेष्टा व्याहृतिभिः— चेष्टा** = அங்கங்களைத் தொடுதல் முதலிய காரியங்களினலும் **व्याहृतिभिः** = பேச்சுக்களாலும் **अर्थिनां** ப்ரச்னம் செய்பவர்களுக்கு **शुभाशुभ फलं** = **शुभ** = நல்லதாயும் **अशुभ** = கெட்டதாயுமுள்ள

---

*காலம் — என்பது காலபுருஷனைக் குறிக்கும்.

फलं = பயனை सन्दर्शयति = நன்கு தெரிவிக்கின்றதோ अतः = ஆனதுபற்றி दिगुदित स्थानाहृतानि = दिक् = கிழக்கு முதலிய திக்குகளையும் उदित = ப்ரச்னம் செய்பவரால் சொல்லப் பட்டதையும் स्थान = ப்ரச்னம் செய்பவர் இருக்கும் இடத்தையும் आहृतानि = அக்காலம் பிறரால் கொண்டுவரப் பட்ட பொருளையும் ईक्षता = நன்கு கவனித்த दैवज्ञेन = சோதிடப்புலவரால் प्रष्टृ निजापराङ्ग घटनां = प्रष्टृ = ப்ரச்னம் செய்பவரின் निज = சொந்தமானதும் अपर = பிறருடையது மான अङ्ग = அவயவங்களின் घटनां = நிலையையும், அதாவது தொடுதல் முதலியவற்றையும் कालं च = அச்சமயம் தினத்தில் சென்றது போக எஞ்சியுள்ள காலத்தையும் (அதாவது— உதய லக்னத்தையும்) धिया = புத்தியினால் आलोच्य = கண்டறிந்துகொண்டு अर्थिनां = ப்ரச்னம் செய்பவருக்கு शुभाशुभं = சுபத்தையோ அசுபத்தையோ वाच्यम् = சொல்ல வேண்டும். அதாவது அக்காலம் அவரவர் தத்தமது அங்கங்களைத் தொடுதல், கால புருஷனே தனது அங்கங்களைத் தொட்டுக் காட்டினதாகவும் அவரவர் பேசும் வார்த்தை கள் காலபுருஷனின் வார்த்தைகளாகவும் ஆகும் என்று கொள்ளவேண்டுமென்பது இதனால் பெறப்பட்டது. (1)

குறிப்பு :— ப்ருஹத் ஜாதகத்தில் மேஷம், ஸிம்ஹம், தனுசு, இந்த ராசிகள் கிழக்கு என்றும், விருஷபம், கன்னி மகரம் இவை தெற்கு என்றும், மிதுனம், துலாம், கும்பம் இவை மேற்கு என்றும், கடகம், விருச்சிகம், மீனம் இவை வடக்கு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் கிழக்குக்குச் சூரியனும், தென்கிழக்குக்குச் சுக்கிரனும், தெற்குக்கு அங்காரகனும், தென்மேற்குக்கு ராகுவும்,

மேற்குக்குச் சனியும், வடமேற்குக்குச் சந்திரனும், வடக்குக்கு புதனும், வடகிழக்குக்குக் குருவும், அதிபர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், பிரசவ அறை, வீட்டின் எந்தப் பக்கத்திலுள்ளது என்பதைச் சொல்லுமிடத்து மேஷம், கடகம், துலாம், விருச்சிகம் இந்நான்கும் லக்னமானல், வீட்டின் கிழக்குப் பக்கத்தில் பிரசவ அறை என்றும், தனுசு, மீனம், மிதுனம், கன்னி இந்நான்கும் லக்னமானல், வீட்டின் வடக்குப் பக்கத்தில் பிரசவ அறை என்றும், விருஷபம் லக்னமானல் வீட்டின் மேற்குப் பக்கத்தில் பிரசவ அறை என்றும், மகரமும், சிங்கமும் லக்னமானல் வீட்டின் தெற்குப் பக்கத்தில் பிரசவ அறை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சுலோகத்தில் **दिक्** (திக்) என்று சொன்னதைக்கொண்டு சோதிட வித்வானைச் சுற்றியுள்ள திக்குகளை அறியும்பொழுது இன்னின்ன திக்குகளுக்கு இன்னின்ன ராசிகளென்பதையும், இன்னின்ன திக்குகளுக்கு இன்னின்னர் அதிபர் என்பதையும் கண்டு பலன் சொல்லவேண்டும் என்பதும் பெறப்பட்டது. மேலும், சுலோகத்தில் **स्थान** (ஸ்தான) என்றதால், பிரச்னம் செய்பவர் வந்து நிற்குமிடம் என்றவிடத்தில் அவர்வந்து ஏறிநிற்குமிடம் எந்த ராசியென்பதையும் இதன்மூலம் அறியவேண்டுமென்பதும் பெறப்பட்டது.

இவ்விஷயத்தில் "பராசரர்" சொல்லியிருப்பதாவது:—

"**इह खलु चराचराणां भूतानां कालोऽन्तरात्मा सर्वदा सर्वदर्शी शुभाशुभैः यः फलसूचकः स विशेषेण प्राणिनां स्वपराङ्गेषु स्पर्श व्याहारेङ्गित चेष्टादिभिर्निमित्तैः फलमभिदर्शयति । तत्प्रयतो दैवज्ञोऽनुपहतमतिरवधार्थ स्वशास्त्रार्थमनुस्मृत्य यशो धर्मानुग्रहार्थं**

मर्थिनां शुभाशुभानामर्थानां भावाभावमभिनिर्दिशेत् ।

तत्र देशे दिशः कालं व्याहारं द्रव्यदर्शनम् ।
अङ्ग प्रत्यङ्ग संस्पर्शं समीक्ष्य फलमादिशेत् ॥ इति ॥

मू० स्थानं पुष्पसुहासि भूरिफलभृत्सुस्निग्ध कृत्तिच्छदाऽस-
त्पक्षिच्युत शस्तसंज्ञित तरुच्छायोपगूढं समम् ।
देवर्षि द्विज साधु सिद्धनिलयं सत्पुष्प सस्योक्षितं
सत्स्वादूदक निर्मलत्वजनिताह्लादं च सच्छाद्वलम् ॥ २ ॥

### இரண்டாவது சுலோகம்

(அவதாரிகை) சோதிடரிடம் ப்ரச்னம் செய்யும்பொழுது அவர் இருக்குமிடத்தைக்கொண்டும், சுபாசுப பலன் அறியும் முறையை இதனுல் உபதேசிக்கிருர்.

(ப-ரை) **पुष्पसुहासि** = புஷ்பங்களால் நன்கு பிரகாசிக்கின்றனவும் **भूरिफलभृत्** = அதிகம் பழங்கள் நிறைந்தனவும் **सुस्निग्ध कृत्तिच्छद** = மிக்க அழகிய பட்டை, இலை இவைகளையுடையனவும் **असत्पक्षिच्युत** = கெட்ட பக்ஷிகளான காக்கை ஊமைக்கோட்டான் இவை முதலியன இல்லாதனவும் **शस्तसंज्ञित** = நல்ல பெயருள்ளனவுமான **तरु** = மரங்களின் **च्छायोपगूढं** = நிழலடர்ந்ததும் **समं** = மேடு பள்ளமற்றதும் **देवर्षिद्विज साधु सिद्ध निलयं** = தேவர், ரிஷி, பிராஹ்மணர், சாது ஜனங்கள், ஸித்தர் (ஒருவகை தேவ வகுப்பினர்) இவர்களின் வீடும் **सत्पुष्प सस्योक्षितं** = நல்ல புஷ்பமுள்ள இடமும், நல்ல பயிருள்ள இடமும், நன்கு ஜலம் தெளிக்கப்பட்டதும் **सत्स्वादूदक निर्मलत्व जनिताह्लादं** = சுத்தமும், ருசியுள்ளதுமான ஜலமுள்ள இடமும் அழுக்கற்றிருத்தலின் மூலமுண்டு

பண்ணப்பட்ட ஆனந்தத்தை யுடையதும் **सच्छाद्वलं च** = நல்ல பசும் புல் தரையை யுடையதுமான **स्थानं** = இடமானது (**सत्** = பிரச்னம் செய்யும்பொழுது) சிறந்த ஸ்தானமாக ஆகும். (2)

(குறிப்பு)—இதுவரை கூறிய நல்ல இடத்திலிருக்கும் சோதிட வித்வானிடம் கேட்கப்படும் பலன் நன்கு பலிதமுடையதாகும்.

## மூன்றுவது சுலோகம்

(அ - கை) இதனுல் அசுப ஸ்தானம் சொல்லப்படுகிறது.

**मू० ॥ छिन्न भिन्न कृमिखात कण्टकि प्लुष्ट रूक्ष कुटिलैर्न सत्कुजैः ।**
**क्रूर पक्षियुत निन्द्यनामभिः शुष्कशीर्णबहुपर्णचर्मभिः ॥ ३ ॥**

(ப-ரை) **छिन्न** = கற்பிக்க(ஒட்ட)ப்பட்டனவும், **भिन्न** = பிளக்கப்பட்டனவும் **कृमिखात** = வண்டு துளைத்தனவும் அல்லது செல்லரித்தனவும் **कण्टकि** = முள்ளடர்ந்தனவும் **प्लुष्ट** = எரிக்கப்பட்டனவும், **रूक्ष** = அழகில்லாதனவும், **कुटिलैः** = கோணலாக வளைந்தனவும், **क्रूरपक्षियुत** = கொடூரமான பக்ஷிகளுடன் (காக்கை, கழுகு, ஆந்தை முதலியவற்றுடன்) கூடினதும் **निन्द्यनामभिः** = கெட்ட பெயருள்ளனவும் **शुष्क** = உணர்ந்தும் **शीर्ण** = சிதறியும் உள்ள **बहुपर्णचर्मभिः** = வெகு இலை, பட்டை இவற்றையுடையனவுமான **कुजैः** = மரங்களுடன்கூடின **स्थानं** = ஸ்தானமானது **न सत्** = ப்ரச்னத்திற்கு நல்லதன்று. நல்ல பலனேற்படாது என்பது கருத்து. (3)

### நான்காவது சுலோகம்

(அ-கை) அதே அசுப ஸ்தானத்தைச் சொல்லுகிறார்:—

**மூ॰ ॥ श्मशान शून्यायतनं चतुष्पथं तथाऽमनोज्ञं विषमं सदोषरम् ।**
**अवस्कराङ्गार कपाल भस्मभिश्चितं तुषैः शुष्कतृणैर्न शोभनम् ॥**

(ப - ரை) **श्मशान** = சுடுகாடும் **शून्यायतनं** = மனிதனில்லாத வீடும், **चतुष्पथं** = நாச்சந்து வீதியும் **तथा** = அவ்விதமே **अमनोज्ञं** = மனத்துக்குப் பிடிக்காத இடமும், **विषमं** = மேடு பள்ளமுள்ள இடமும், **सदा** = எப்பொழுதும், **ऊषरं** = உழவுமண் நிறைந்ததும் **अवस्कर** = குப்பையும் **अङ्गार** = தணலும் **कपाल** = மண்டையோடும், **भस्मभिः** = சாம்பலும் **चितं** = நிறைந்ததும் **तुषैः** = உமிகளுடனும், **शुष्कतृणैः** = காய்ந்த புற்களுடனும் கூடின இடமானது **न शोभनम्** = ப்ரச்னத்துக்கு நல்ல இடமன்று. (4)

(குறிப்பு) இவ்விடங்களிலிருக்கும் சோதிட வித்வானிடம் கேட்கப்படும் பலன் பலிக்காது என்று கருத்து.

### ஐந்தாவது சுலோகம்

(அ - கை) வேறு அசுபஸ்தானங்களைச் சொல்லுகிறார்:-

**மூ॰ ॥ प्रव्रजित नग्न नापित रिपु बन्धन सौनिकैस्तथा श्वपचैः ।**
**कितव यति पीडितैर्युतमायुध माध्वीक विक्रयैर्न शुभम् ॥ ५ ॥**

(ப - ரை) **प्रव्रजित** = ஸன்யாஸி அதாவது ஆண்டி **नग्न** = வஸ்திரமில்லாதவன் **नापित** = அம்பட்டன் **रिपु** = சத்துரு **बन्धन** = கட்டுப்படுமிடம் **सौनिकैः** = மாடடிப்பவன் இவர்களுடன் கூடினதும், **तथा** = அவ்விதமே **श्वपचैः** = சண்

டாளர்களுடன் கூடினதும் **कितव**=சூதாடுபவனுடன் கூடினதும் (சீட்டாடுபவனுடன் கூடினதும் என்றும் சொல்லலாம்) **यति**=த்ரிதண்டிகளுடன் கூடினதும் **पीडितैः**=வியாதி பீடிதர்களுடன் **युतं** = கூடினதும், **आयुधमाध्वीकविक्रयैः** = ஆயுதமுள்ள இடமும், கள்ளுக்கடையுள்ள இடமும் (**माध्वीक**='காப்பிக்கடை' என்றும் சொல்லலாம்) நகை வியாபாரிகள் இருக்குமிடமும் **विक्रय**=நகை வியாபாரிகள் வீடு என பட்டோத்பலர் கூறுகிறார். **न शुभम्**=சுபமான ஸ்தானமன்று. (5)

### ஆருவது சுலோகம்

(அ - கை) திக்கு, காலம் இவற்றின் சுபாசுப லக்ஷணத்தைச் சொல்லுகிறார் :—

**मू० ॥ प्रागुत्तरेशाश्च दिशः प्रशस्ताः प्रष्टुर्न वायव्म्बु यमाग्नि रक्षः ।**
**पूर्वाह्णकालेऽस्ति शुभं न रात्रौ सन्ध्याद्वये प्रश्नकृतोऽपराह्णे ॥**

(ப - ரை) **प्रष्टुः**=ப்ரச்னம் செய்பவருக்கு **प्रागुत्तरेशाः**= கிழக்கு, வடக்கு, வடகிழக்கு இந்த **दिशः** = திக்குகள் **प्रशस्ताः**=சிறந்தனவாகும் **वायुः**=வடமேற்கு **अम्बु**=மேற்கு **यम**=தெற்கு **अग्नि**=தென்கிழக்கு **रक्षः**=தென்மேற்கு இந்த திக்குகள் **न शुभाः**=சுபங்களன்று. மேலும், **एताः**=சுபங்களாகச் சொல்லப்பட்ட இந்த திக்குகளும் **पूर्वाह्णकाले**= தினத்தின் பூர்வபாக காலத்திலேயே **प्रष्टुः**=ப்ரச்னம் செய்பவருக்கு **शुभदाः**=சுபத்தை கொடுக்கின்றனவாக **भवन्ति**= ஆகின்றன. **रात्रौ**=ராத்திரியிலும் **सन्ध्याद्वये**= இரண்டு ஸந்திகளிலும் **अपराह्णे**=மாலையிலும் **प्रश्नकृतः**=ப்ரச்னம் செய்பவருக்கு **शुभं**=சுபமானது **न अस्ति**=உண்டாவதில்லை. (6)

### ஏழாவது சுலோகம்

(அ - கை) பிறகு வேறுன சுபாசுப லக்ஷணத்தை இதனுல் சொல்லுகிருர்:—

मू॰ ॥ यात्राविधाने हि शुभाशुभं यत्
प्रोक्तं निमित्तं तदिहापि वाच्यम् ।
दृष्ट्वा पुरो वा जनताहृतं वा
प्रष्टुः स्थितं पाणितलेऽथ वस्त्रे ॥ ८ ॥

(ப - ரை) **यात्राविधाने** = யாத்திரையைப் பற்றிச் சொல்லுமிடத்தில் (அதாவது "**यात्राध्याय**"த்தில்) **शुभाशुभं** = சுபமும், அசுபமுமான **यत्** = எந்த **निमित्तम्** = நிமித்தமானது **प्रोक्तं** = சொல்லப்பட்டதோ **तत्** = அந்த நிமித்தமானது **इह अपि** = இந்த ப்ரச்ன விஷயத்திலும் **वाच्यम्** = சொல்லத் தக்கது. **पुरो वा** = எதிரிலிருப்பதையோ **जनताहृतं वा** = ஜனக் கூட்டத்தினுல் கொண்டுவரப்படுவதையோ **प्रष्टुः** = ப்ரச்னம் செய்பவருடைய **पाणितले** = கையிலோ **अथ** = அல்லது **वस्त्रे** = துணியிலோ **स्थितं** = இருப்பதையோ **दृष्ट्वा** = கவனித்துக் கொண்டு சுபாசுபபலன் சொல்லவேண்டும். (7)

### எட்டாவது சுலோகம்

(அ - கை) அங்கங்களை புருஷன் என்றும், ஸ்த்ரீ என்றும், நபும்ஸகம் என்றுமாகப் பிரித்துக்கொண்டு, முதலில் புருஷன் என்ற அங்கப் பிரிவை மூன்று பாதங்களாலும், ஸ்த்ரீ என்ற அங்கப் பிரிவை நான்காவது பாதத்தாலும் சொல்லுகிருர்.

सू० ॥ अथाङ्गान्यूर्वोष्ठ स्तन वृषण पादं च दशना
भुजौ हस्तौ गण्डौ कच गल नखाङ्गुष्टमपि यत् ।
सशङ्खं कक्षांसं श्रवण गुद सन्धीति पुरुषे
स्त्रियां भ्रू नासा स्फिग्वलि कटि सुलेखाङ्गुलि चयम् ॥ ८ ॥

मू० ॥ जिह्वा ग्रीवा पिण्डिके पार्ष्णि युग्मं
जङ्घे नाभिः कर्णपाली कृकाटी । ½ ।

(ப - ரை) अथ = பிறகு ऊरू = துடைகள் ओष्ठ = உதடுகள் स्तन = இரண்டு ஸ்தனங்கள் वृषण = கொட்டைகள் पादं च = இரண்டு பாதங்கள் दशना = பற்கள் भुजौ = தோள்கள் हस्तौ = இரண்டு நுனிக்கைகள் गण्डौ = இரு கன்னங்கள் कच = தலைமுடி गल = கழுத்து नख = நகங்கள் अङ्गुष्ठम् अपि = கால், கைகளிலுள்ள கட்டை விரல்கள் ஆகிய இவை यत् = யாது உண்டோ सशङ्खं कक्षांसं = சங்கத்துடன் கூடின கக்ஷங்களும் (அதாவது கக்கங்களும்) சங்கத்துடன் கூடின தோள்களும் श्रवण = காதுகளும் गुद = மலவிஸர்ஜன ஸ்தானமும் सन्धि = எல்லா அங்கங்களிலுமுள்ள பூட்டுக்களும் इति = என்ற இவை पुरुषे = புருஷனிடமுள்ள अङ्गानि = அங்கங்களாகும். அதாவது இவை சரீரத்திலுள்ள புருஷாங்கங்கள் எனப்படும். இனி ஸ்த்ரீ அங்கங்கள் சொல்லப்படுகின்றன:- भ्रू = புருவம் नासा = மூக்கு स्फिक् = பிடரி நரம்பு वलि = மடிப்பு (அதாவது வயிற்றிலுள்ள மூன்று மடிப்பு) कटि = இடுப்பு सुलेखा = கையின் நடுவிலுள்ள கோடு अङ्गुलिचयं = விரல்களின் கூட்டம் जिह्वा = நாக்கு ग्रीवा = கழுத்து पिण्डिके = முட்டுக்காலின் பின் பாகங்கள் पार्ष्णियुग्मं = இரண்டு விலாப்

புறங்கள் **जङ्घे** = முட்டிக்கால்கள் **नाभिः** = உந்தி **कर्णपाली** = காதின் பின்புறங்கள் **कृकाटी** = கழுத்தின் பின் பாகம் இவை சரீரத்திலுள்ள ஸ்த்ரீ அவயவமாகும். (8½)

**ஒன்பது, பத்தாவது சுலோகங்கள்**

(அ - கை) இனி நபும்ஸகாவயவங்கள் சொல்லப் படும்.

**मू० ॥ वक्त्रं पृष्ठं जत्रु जान्वस्थि पार्श्वं**
**हृत्ताल्वक्षी मेहनोरस्त्रिकं च ॥ ९ ॥**
**नपुंसकाख्यं च शिरो ललाट माश्वाद्यसंज्ञैरपरैश्चिरेण ।**
**सिद्धिर्भवेज्ज्ञातु नपुंसकैर्नो रूक्ष क्षतैर्भग्न कृशैश्च पूर्वैः ॥ १० ॥**

(ப - ரை) **वक्त्रं** = முகமும் **पृष्ठं** = பின்தட்டும் **जत्रु** = மாருக்கும், கஷ்கத்துக்கும் நடுவிலுள்ள சந்தியும் **जानु** = முட்டிக்காலும் **अस्थि** = எலும்பும் **पार्श्वं** = இருபக்கங்களும் **हृत्** = ஹ்ருதயமும் **तालु** = மேல்வாய்க்கட்டையும் **अक्षी** = கண்களும் **मेहन** = ஆண்குறியும் **उरः** = மார்பும் **त्रिकं** = இடுப்பின் பின்பாகமும் **शिरः** = தலையும் **ललाटं** = நெற்றியும் **नपुंसकाख्यम्** — நபும்ஸகம் எனப்பெயரிய அங்கமெனக் காணத் தக்கது. **अद्यासंज्ञैः** — முதலிற்சொல்லிய புருஷப்பெயருள்ள அங்கங்களினால் அவற்றைத் தொடுதலால் **आशु** — சீக்கிரமாக **सिद्धिः** — பலப்ராப்தி என்றும் **अपरैः** — அதற்கடுத்துள்ள ஸ்த்ரீப்பெயருள்ள அங்கங்களைத் தொடுதலால் **चिरेण** — தாமதித்து பலப்ராப்தி என்றும் **नपुंसकैः** — நபும்ஸகாங்கங்களைத் தொடுதலால் **नो सिद्धिः** — பல ஸித்தி ஏற்படாதென்றும் காணவேண்டும். **पूर्वैः** — முன்னர் சொன்ன புருஷாவயவங்

களோ ஸ்த்ரீ அவயவங்களோ **रूक्ष** — அழகில்லாதனவாகவும் **क्षतैः** — அடிபட்டனவாகவும் **भग्न** — வெடிப்புள்ளனவாகவும் **कृशैः च** — இளைத்தனவாகவுமோ இருந்தால் **जातु** — ஒரு பொழுதும் **नो सिद्धिः** — பலஸித்தி ஏற்படாது என்று காண்க.

### பதினொன்ருவது சுலோகம்

(அ-கை) இனி தனித்தனி அங்கத்தைத் தொடுதல் மூலம் பலன் காணும் முறையைச் சொல்லுகிறுர் :—

मू० ॥ स्पृष्टे वा चालितेवाऽपि पादाङ्गुष्टेऽक्षिरुग्भवेत् ।
अङ्गुल्यां दुहितुःशोकं शिरोघाते नृपाद्भयम् ॥ ११ ॥

(ப-ரை) ப்ரச்னம் கேட்கும்பொழுது **पादाङ्गुष्टे** — கால் கட்டை விரலை **स्पृष्टे** — கேட்பவன் தொட்டாலும் **चालिते** — அசைத்தாலும் **अक्षिरुक्** — கண்ணில் வியாதி **भवेत्** = உண்டாகும். **अङ्गुल्यां** = விரலைத் தொட்டாலும், அசைத்தாலும் **दुहितुः** = பெண்ணின் **शोकं** — துக்கத்தை உண்டாக்கும். **शिरोघाते** — தலையிலடித்துக்கொண்டு கேட்டால் **नृपात्** — அரசனிடமிருந்து **भयं** — பயம் [**भवेत्** — உண்டாகும்]. (11)

### பன்னிரண்டாவது சுலோகம்

मू० ॥ विप्रयोगमुरसि स्वगात्रतः कर्पटाहतिरनर्थदा भवेत् ।
स्यात्प्रियाप्तिरभिगृह्यकर्मटं पृच्छतश्चरणपाद योजितुः ॥ १२ ॥

(ப-ரை) **उरसि** — மார்பைத் தொட்டால் **विप्रयोगं** — ப்ரச்னம் செய்பவனுக்கு ஏதோவொன்றுடன் விட்டுப் பிரிதலைச் சொல்லுக. **स्वगात्रतः** — ப்ரச்னம் செய்பவன் தனது சரீரத்தி

னின்றும் **कर्पटाहृतिः** = துணியையெடுத்தல் **अनर्थदा** – அவனுக்கு அனர்த்தத்தை (கெடுதலை)த் தருவதாக **भवेत्** = ஆகும் **कर्पटं** – துணியை **परिगृह्य** – பிடித்துக்கொண்டு **चरण पाद योजितुः** – ஒரு காலில் மற்றொரு காலைச் சேர்த்துக்கொண்டு **पृच्छतः** – ப்ரச்னம் கேட்பவருக்கு **प्रियाप्तिः** — ப்ரியமானவற்றின் ப்ராப்தியானது **स्यात्** – உண்டாகும். (12)

**பதிமூன்றுவது சுலோகம்**

**மூ॰ ॥ पादाङ्गुष्ठेन विलिखेत् भूमिं क्षेत्रोत्थ चिन्तया ।**
**हस्तेन पादौ कण्डूयेत्तस्य दासीमयी च सा ॥ १३ ॥**

(ப-ரை) **पादाङ्गुष्ठेन** – கால்கட்டை விரலால் **भूमिं** – பூமியை **विलिखेत्** = கீறினால் **क्षेत्रोत्थ चिन्तया** – பூமியைப் பற்றிய சிந்தையென்றறிக. **हस्तेन** – கையினால் **पादौ** = கால்களை **कण्डूयेत्** – சொரிந்தால் **सा** – அது **दासीमयी च** – தேவாடியாளைப்பற்றிய சிந்தையாகும். (வேலைக்காரியைப் பற்றியது என்றும் சொல்லலாம்.) (13)

**பதினான்காவது சுலோகம்**

**மூ॰ ॥ ताल भूर्जपट दर्शनेऽशुकं चिन्तयेत् कचतुषास्थि भस्मगम् ।**
**व्याधिराश्रयति रज्जु जालकं वल्कलं च समवेक्ष्य बन्धनम् ॥**

(ப-ரை) **ताल भूर्ज पट दर्शने** – ப்ரச்ன காலத்தில் பனையோலை (விசிறி முதலியன)யையோ, பூர்ஜ மரப்பட்டையையோ கண்டால் **अंशुकं** – கேட்பவன் வஸ்திரத்தைப் பற்றிக் கேட்கிறான் என **चिन्तयेत्** – அறியவேண்டும். **कच तुषास्थिभस्मगं** – தலைமயிர், உமி, எலும்பு, சாம்பல் இவற்றுள்

ளொன்றை ப்ரஷ்டா அடைந்தா (தொட்டா)ளுயின் அவனே **व्याधि:**—வியாதி **आश्रयति** — வந்தடைகிறது **रज्जु जालकं**— கயிற்றையும், வலேயையும், **वल्कलं च** — மரவுரியையும் **समवेक्ष्य**— அச்சமயம் கண்டால் (அல்லது அவற்றை கையில் கொண்டு) கேட்டால் **बन्धनं**—கட்டுப்படுதலைச் சொல்லுக.

### பதினைந்து, பதினாறுவது சுலோகங்கள்

**मू० ॥ पिप्पली मरिच शुण्ठि वारिदै रोध्र कुष्ठ वसनाम्बु जीरकैः ।**
**गन्धमांसि शतपुष्पया वदेत् पृच्छतस्तगरकेण चिन्तयेत् ॥**
**स्त्री पुरुष दोषपीडित सर्वार्थ धान्य तनयानाम् ।**
**द्वि चतुष्पद क्षितीनां विनाशतः कीर्त्तितैर्दृष्टैः ॥ १६ ॥**

(ப-ரை) **पिप्पली** — அரிசித் திப்பிலியைக் கண்டால் **स्त्रीदोष**=தோஷபீடிதையான ஸ்த்ரீயைப் பற்றிய சிந்தை யென்றும் **मरिच**—மிளகைக்கண்டால் **पुरुषदोष पीडित**— தோஷ பீடிதனான புருஷனைப்பற்றிய சிந்தை என்றும் **शुण्ठि**—சுக்கை அல்லது இஞ்சியைக் கண்டால் [**पुरुषदोष-पीडित**—] வியாதி பீடிதனான அல்லது மரித்த மனிதனைப் பற்றிய சிந்தையென்றும், **वारिदैः** — கோரைக் கிழங்கை **कीर्त्तितैः**—சொன்னாலும் **दृष्टैः**—கண்டாலும் **सर्व**—ஸர்வத்தி னுடையவும் **विनाशतः**—நாசத்தைப் பற்றிய சிந்தையென்றும் **रोध्र** — ரோத்திர புஷ்பத்தைக் கண்டால் **अर्थविनाशतः**— பொருள் நாசத்தைப் பற்றிய சிந்தை யென்றும் **कुष्ठ** —வசம்பைக்கண்டால் **सुत**—புத்திர நாசத்தைப் பற்றிய சிந்தை யென்றும் **वसन** — துணியைக் கண்டால் **अर्थ** — பொருள் நாசத்தைப் பற்றிய சிந்தை யென்றும் **अम्बु**—நீர் வாளத்தைக் கண்டால் **धान्य** — தான்ய நாசத்தைப் பற்றிய சிந்தை

என்றும் जीरकैः—ஜீரகத்தை कीर्त्तितैः—சொன்னாலும் दृष्टैः—கண்டாலும் तनयानां—புத்திர நாசத்தைப் பற்றிய சிந்தையென்றும் गन्धमांसि—ஜடாமாஞ்சியைக் கண்டால் द्विपद—இரண்டு காலுள்ளனவும், இரண்டு குளம்புள்ளனவுமான ஜந்துவின் நாசத்தைப் பற்றிய சிந்தையென்றும், शतपुष्पया—சதகுப்பையைக் கண்டால் चतुष्पद—நான்கு குளம்புள்ளவற்றின் நாசத்தைப் பற்றிய சிந்தை யென்றும் तगरकेण—தகரவிதையைக் கண்டால் क्षितीनां विनाशतः—பூமியின் நாசத்தைப் பற்றிய சிந்தை யென்றும் காண்க. (15, 16)

(குறிப்பு) இவ்விரண்டு சுலோகங்களையும் பட்டோத்பலர் சொன்னபடி பிரித்து அன்வயத்துக் கேற்றபடி உரை எழுதப்பட்டிருக்கிறது.

பதினேழாவது சுலோகம்

मू० ॥ न्यग्रोध मधुक तिन्दुक जम्बू प्लक्षाम्र बदर जातिफलैः ।
धन कनक पुरुष लोहांशुक रूप्यौदुम्बराप्तिरपि करगैः ॥ १७

(ப-ரை) न्यग्रोध-जातिफलैः—ஆலின் விதை, ஜாதிமரத்தின் விதை இவைகள், ப்ரச்னம் செய்பவரின் करगैः—கையிலிருக்குமானால் धनाप्तिः—பணலாபமேற்படும் என்றும் मधुकफलैः—இலுப்பை விதை ப்ரஷ்டாவின் கையிலிருந்தால் कनकाप्तिः—பொன் கிடைக்குமென்றும் तिन्दुकफलै—புளியின் விதையிருந்தால் पुरुषप्राप्तिः—புருஷனுடைய ப்ராப்தி என்றும் जम्बूफलैः—நாகைப் பழமிருந்தால் लोहाप्तिः—இரும்பு கிடைக்குமென்றும் प्लक्षफलैः—அரசின் விதையானால் अंशुकाप्तिः—வஸ்திரலாபமென்றும், आम्रफलैः—மாவின் விதையானால் रूप्याप्तिः—வெள்ளி கிடைக்குமென்றும் बदरफलैः—

இலந்தை விதையானல் औदुम्बराप्तिः — அத்தி (தாம்பரம்) கிடைக்கும் என்றும் சொல்லுக. (17)

பதினெட்டாவது சுலோகம்

मू० ॥ धान्य परिपूर्ण पात्रं कुम्भः पूर्णः कुटुम्ब वृद्धिकरौ ।
गज गो शुनां पुरीषं धन युवति सुहृद्विनाशकरम् ॥ १८ ॥

(ப-ரை) धान्य परिपूर्ण पात्रं — நெல் நிறைந்த பாத்திரமோ कुम्भः पूर्णः — (ஜலம்) நிறைந்த குடமோ, பார்க்கப்படுமாயின் कुटुम्ब वृद्धि करौ — குடும்ப விருத்தியைத் தரும். गज गो शुनां पुरीषं — யானை, பசு, நாய், இவற்றின் சாணம் காணப் படுமாயின் धन युवति सुहृद्विनाशकरं — முறையே தனம், ஸ்த்ரீ, மித்திரன் இவர்களுக்கு நாசத்தைத் தெரிவிக் கும். (18)

(குறிப்பு) இங்கு பராசரர்:—गोमयस्य दर्शनं — (பசு) சாணத்தைக் காண்பது स्त्री व्यभिचारं — ஸ்திரீயின் கெட்ட நடத்தையையும், हस्तिना — யானையைக் காண்பது, द्रव्यागमं — திரவ்யலாபத்தையும் हस्ति शकृतः — யானை லத்தியைக் காண் பது भ्रंशं ऐश्वर्यस्य — ஐச்வர்யக் குறைவையும் தெரிவிக்கும் எனச் சொல்லுகிறர்.

பத்தொன்பதாவது சுலோகம்

मू० ॥ पशु हस्ति महिष पङ्कज रजत व्याघ्रैर्लभेत संदृष्टैः ।
अवि धन निवसन मलयज कौशेया भरण सङ्घातम् ॥ १९ ॥

(ப-ரை) ப்ரச்னம் செய்யும் காலத்தில், पशु = பசு காணப்பட்டால் अविं लभेत — ஆட்டு ரோமத்தால் ஆன

கம்பளம் கிடைக்கும். हस्ति — யானை காணப்பட்டால் धनं (लभेत) — பணம் கிடைக்கும். महिष = எருமை காணப் பட்டால், *निवसनं (लभेत) — வெண்பட்டின் லாபமுண்டாகும். पङ्कज — தாமரைப்பூ காணப்பட்டால் (चन्दनं) मलयजं (लभेत) = சந்தனம் கிடைக்கும். रजत — வெள்ளி காணப்பட்டால் कौशेयं (लभेत) வெண்பட்டு கிடைக்கும். व्याघ्र (संदर्शनेन) புலி காணப்பட்டால் आभरणं (लभेत) — நகை கிடைக்கும்.

### இருபதாவது சுலோகம்

மூ॥ पृच्छा वृद्धश्रावक सुपरिव्राड् दर्शने नृभिर्विहिता।
मित्र द्यूता र्थभवा गणिका नृप सूतिकार्थकृता ॥ २० ॥

(ப-ரை) नृभिः — மனிதர்களால் विहिता — கேட்கப் பட்ட पृच्छा — கேள்வியானது, அப்பொழுது वृद्ध श्रावक दर्शने — வயதான காபாலிகன் காணப்பட்டால் मित्र द्यूता र्थभवा — மித்திரனுக்கு வேண்டியோ த்யூதத்திற்கு வேண்டியோ (சீட்டாடுவதற்கு வேண்டியோ என்றும் சொல்லலாம்) கேட்கப்பட்டதாகும். सुपरिव्राड्दर्शने — நல்ல ஸன்னியாஸியைக் கண்டால் गणिका नृप सूतिकार्थकृता — தாஸியைப் பற்றியோ அரசனைப் பற்றியோ, ப்ரஸவித்த ஸ்த்ரீயைப் பற்றியோ செய்யப்பட்டதாகும். (20)

---

*निवसन — என்ற பதத்திற்கு பட்டோத்பல வ்யாக்யானத்தில் 'வெண்பட்டு' என்று கூறப்பட்டிருக்கிறது. பராசரரும் அவ்விதமே கூறுகிருர்.

### இருபத்தொன்றுவது சுலோகம்

**மூ॥ शाक्योपाध्यायार्हन्निर्ग्रन्थि निमित्त निगम कैवर्तैः।**
**चौर चमूपति वणिजां दासी योधाऽऽपणस्थ वध्यानाम्॥**

(ப-ரை) **शाक्य दर्शने** = பௌத்த ஸன்னியாஸியைக் கண்டால், **चोरकृता** = சோரன் (திருடன்) விஷயமான ப்ரச்னமாகும். **उपाध्याय दर्शने** = உபாத்யாயரைக் கண்டால் **चमूपति कृता** = சேனாதிபதியைப் பற்றியதாகும். **अर्हत् दर्शने** = ஜைனனைக் கண்டால், **वणिजां** = வியாபாரியைப் பற்றியதாகும். **निर्ग्रन्थि दर्शने** = காபாலிகனைக் கண்டால் **दासीकृता** = தேவரடியாளை (அல்லது வீட்டு வேலைக்காரியை)ப் பற்றியதாகும். **निमित्त दर्शने** = *ஜ்யௌதிஷிகனைக் கண்டால் **योधकृता** = யுத்த வீரனைப் பற்றியதாகும். **निगम दर्शने** = வியாபாரியைக் கண்டால் **आपणस्थकृता** = கடைத்தெருவிலுள்ள செட்டியைப் பற்றியதாகும். **कैवर्तदर्शने** = மீன் பிடிப்பவனைக் கண்டால், **वध्यानां** = கொலையாளியைப் பற்றியதாகும். (21)

### இருபத்திரண்டாவது சுலோகம்

**மூ॥ तापसे शौण्डिके दृष्टे प्रोषितं पशुपालनम्।**
**हृद्गतं पृच्छकस्य स्यादुञ्छवृत्तौ विपन्नता॥ २२॥**

(ப-ரை) **तापसे** = தபஸ்வியானவன் **दृष्टे** = காணப்பட்டால் **पृच्छकस्य**—ப்ரச்னம் செய்பவனுடைய **हृद्गतं**—மனத்திலிருப்பது **प्रोषितम्**—வெளிதேசம் போயிருப்பவனைப்

---

*"**निमित्त**"— பதத்திற்கு பட்டோத்பலர் உரையில் "சோதிடமறிந்தவர்" எனக் கூறப்பட்டிருக்கிறது.

பற்றியதாகும். शौण्डिके (दृष्टे) கள் விற்பவன் அல்லது அதிலீடுபட்டவன் காணப்பட்டால், அவன் மனத்திலிருப்பது. पशुपालनम्—பசுவின் ரக்ஷித்தலைப் பற்றியதாகும். उञ्छवृत्तौ — உஞ்ச விருத்தி செய்பவன் (பிச்சையெடுப்பவன் எனலாம்) காணப்பட்டால், विपन्नता—ஆபத்தையடைந்தவனைப் பற்றிய சிந்தையாகும். (22)

இருபத்துமூன்ருவது சுலோகம்

मू० ॥ इच्छामि प्रष्टुं भण पश्यत्वार्यः समादिशेत्युक्ते ।
संयोग कुटुम्बोत्था लाभैश्वर्योद्गता चिन्ता ॥ २३ ॥

(ப-ரை) प्रष्टुं इच्छामि—கேட்க விரும்புகிறேன். भण—சொல்லும் என்ருல் संयोग कुटुम्बोत्था—அவிபக்த (பாகமாகாத) குடும்பத்தைப் பற்றிய चिन्ता — சிந்தையாகும். (அதாவது கேட்கவந்தவன் மனத்தில் எண்ணியிருப்பது இதுவாம்). पश्यतु आर्यः — பெரியார் கவனிக்கவேண்டும் என்று ப்ரச்னம் செய்பவன் சொன்னுல், 'लाभोद्गता—லாபத்தைப் பற்றி ஏற்பட்ட சிந்தையாகும். समादिश—நன்கு சொல்லவேண்டும் என்று ப்ரச்னம் செய்பவனுல் சொல்லப்பட்டால், ऐश्वर्योद्गता चिन्ता — ஐசுவரியத்தைப் பற்றியுண்டான சிந்தையாகும். (23)

இருபத்துநான்காவது சுலோகம்

मू० ॥ निर्दिशेति गदिते दयाध्वजा प्रत्यवेक्ष्य मम चिन्तितं वद ।
आशु सर्वजन मध्यगं त्वया दृश्यतामिति च वन्धु चौरजा ॥

(ப-ரை) निर्दिश—குறிப்பிடும் பார்ப்போம் इति—என்று गदिते — சொல்லப்பட்டால் அந்த சிந்தையானது

**जयाऽध्वजा** — ஜயத்தைப் பற்றியதாகவோ, வழியைப் பற்றியதாகவோ, இருக்கும். **प्रत्यवेक्ष्य** — நன்கு ஆலோசித்தறிந்து **मम चिन्तितं** — என் மனத்திலிருப்பதை **वद**— சொல்லும் **इति** — என்று **गदिते** — சொல்லப்பட்டால் **बन्धुजा**—பந்துவைப் பற்றியதாகும். **सर्वजनमध्यगं**—எல்லா ஜனங்களுக்கும் நடுவிலிருக்கும் ப்ரச்னம் செய்யப்படுபவனை (அதாவது சோதிட வித்வானை)ப்பார்த்து **आशु** — சீக்கிரமாகவே **त्वया**—உம்மால் **दृश्यताम्**—பார்க்கப்படவேண்டும் **इति** — என்று (**उक्ते**) — சொல்லப்பட்டால் **चोरज्ञा** — திருடனைப் பற்றிய சிந்தையாகும். (24)

### இருபத்தைந்தாவது சுலோகம்

(அ-கை). திருடனைக் காணும் முறையை உபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ अन्तःस्थेङ्गे स्वजन उदितो बाह्यजे बाह्य एव**
**पादाङ्गुष्ठाङ्गुलि कलनया दास दासी जनः स्यात्।**
**जङ्घे प्रेष्यो भवति भगिनी नाभितो हृत्स्वभार्या**
**पाण्यङ्गुष्ठाङ्गुलिचय कृतस्पर्शने पुत्र कन्ये ॥ २५ ॥**

(ப-ரை) தன் **अन्तःस्थे अङ्गे**—தன் சரீரத்தினுள்ளிலிருக்கும் அங்கமானது ப்ரஷ்டாவினுல் தொடப்பட்டால், **स्वजनः**-திருடன் சொந்த ஜனமாக **उदितः**—சொல்லப்பட்டான். **बाह्यजे**—வெளியிலுள்ள (**अङ्गे**) அங்கம் தொடப்பட்டால் **बाह्य एव**—திருடன் வெளியிலுள்ளவனே ஆவான். **पादाङ्गुष्ठ**—கால் கட்டைவிரல் தொடப்பட்டால் **दास**—திருடன் அடிமைக்காரனுகிருன். **अङ्गुलि कलनया**—காலிலுள்ள வேறு விரல்

களைத் தொட்டால் **दासीजनः**—வேலைக்கார ஸ்திரீ திருடினவளாகிருள். **जङ्घे**—முட்டிக்கால்களைத் தொட்டால் **प्रेष्यः**—வேலைக்காரன் திருடனுகிருன். (இவனை சமயல்காரன், குமாஸ்தா வென்றும் சொல்லலாம்). **नाभितः**—உந்தியைத் தொட்டால் **भगिनी**—உடன் பிறந்த ஸஹோதரி திருடினவள் **हृत्**—ஹிருதயத்தைத் தொட்டால் **स्वभार्या**—சொந்த மனைவி திருடினவளாகிருள். **पाण्यङ्गुष्ठ** — கையிலுள்ள கட்டை விரலைத் தொட்டால் **पुत्रः**—புத்திரன் திருடனுகிருன். **अङ्गुलिचय कृतस्पर्शने**—கையிலுள்ள மற்ற விரல்களைத் தொட்டால் **कन्या**—பெண் திருடினவளாகிருள். (25)

குறிப்பு :— பிருஹத் ஜாதகத்தில், "**कालाङ्गानि वराङ्गमाननम्**" என்ற சுலோகத்தில், காலபுருஷனுக்கு, தலை—மேஷம்; முகம்—விருஷபம்; மார்பு—மிதுனம்; ஹ்ருதயம்—கடகம்; வயிறு—சிம்மம்; இடுப்பு—கன்னி; மூத்திராசயம் (அதாவது தொப்புளுக்கும், ஆண்குறிக்குமிடையிலுள்ள பாகம்)—துலாம்; ஆண், பெண் குறி—விருச்சிகம்; இரண்டு தொடைகளும்-தனுசு; இரண்டு முட்டிக்கால்களும்-மகரம்; முழங்கால்கள்—கும்பம்; இரண்டு பாதங்களும்—மீனம்; என்றும்; அந்தந்த ராசிகள்—9 நக்ஷத்திர பாதங்கள் உள்ளன, அதாவது:— அசுவதி, பரணி, கிருத்திகை கால் — மேஷம்; கிருத்திகை 3 பாதம், ரோஹிணீ, மிருகசீர்ஷம் 2 பாதம்—விருஷபம்; மிருகசீர்ஷம் 2 பாதம், ஆருத்ரை, புனர்பூசம் 3 கால் வரை—மிதுனம்; ஆயில்யம் சென்றது கடகம்; உத்திரத்துக்குக் கால் வரை—சிங்கம்; சித்திரைக்கு முன்னறை—கன்னி; விசாகத்துக்கு முக்கால் — துலாம்; கேட்டை சென்றது—விருச்சிகம். உத்திராடத்துக்குக் கால்—தனுசு;

அவிட்டத்துக்கு முன்னறை—மகரம்; பூரட்டாதிக்கு முக்கால்—கும்பம்; ரேவதி சென்றது—மீனம்; ஆக உள்ளதாம். ஆகவே, மேஷ ராசியும் அதற்குள்ள நக்ஷத்திர பாதங்களு முதயமானல், திருடப்பட்ட பொருள் தலையிலணியக் கூடியதென்றும்; விருஷபமும், அதற்குரிய நக்ஷத்திர பாதங்களும் உதயமானல் திருடப்பட்ட சாமான் முகத்திலணியக் கூடியதென்றும்; மிதுனமும், அதற்குரிய நக்ஷத்திர பாதங்களு முதயமானல், அது மார்பிலணியக்கூடிய பொருள் என்றும்; கடகமும், அதற்குரிய நக்ஷத்திர பாதங்களு முதயமானல் அது ஹ்ருதயத்தில் (மார்குழி) அணியக் (தங்க) கூடியதென்றும்; சிம்மமும். அதற்குரிய நக்ஷத்திர பாதங்களும் உதயமானல் வயிற்றிலணியக் கூடியது அது என்றும்; கன்னியும், அதன் நக்ஷத்திர பாதங்களும் உதயமானல், இடுப்பிலணியக் கூடிய பொருள் என்றும்; இவ்விதமே அந்தந்தவிடங்களுக்கேற்ற பொருளை மீதமுள்ள ராசிகளும் அதற்குறிய நக்ஷத்திர பாதங்களு முதயமாவதைக்கொண்டு ஊஹித்துப் பலன் சொல்லவேண்டும். மேலும், பிருஹத் ஜாதகம், 1-வது அத்தியாயம் 5-வது சுலோகத்தில், "स्वचराश्च सर्वे" என்று சொன்னதைக்கொண்டு மேஷாதி ராசியுதயமாகும்போது அந்தந்த ராசிக்குச் சொல்லிய விடங்களில் திருட்டுப்போன பொருளிருக்கும் என்றும் கண்டுகொள்க. மேலும், 1-வது அத்தியாயம் 20-வது சுலோகத்தில், "प्लवत्वं स्वाम्याशाख्यम्" என்று சொல்லியிருப்பதைக்கொண்டு பின்வருமாறு திருடர்களிருக்குமிடம் திருட்டுப்போன சொத்து இருக்கும் இடத்தையும் காணவேண்டும். அதாவது:— மேஷ விருச்சிகங்களுக்கு அங்காரகன் அதிபதி; அவனுடைய திக்கு தெற்கு, அந்தத் தெற்கு திக்கில் மேஷ விருச்சிகங்கள் ப்லவங்

களாகும். விருஷபம், துலாம் இவற்றுக்கு சுக்கிரனதிபதி, அவனுக்கு ஆக்னேயீ திக்கு, அத்திக்கில் இவ்விரண்டு ராசிகளும் ப்லவங்களாகும். மிதுன, கன்னிகளுக்குப் புதன் அதிபதி. அவனுடைய திக்கு வடக்கு. இவ்விரண்டு ராசிகளும் வடக்கில் ப்லவங்களாகும். கடகத்திற்கு சந்திரனதிபதி, அவனுக்கு வாயு திக்கு. அத்திக்கில் அது ப்லவமாகும். சிம்மத்திற்கு சூரியனதிபதி. அவனது திக்கு கிழக்கு. அங்கு அது ப்லவமாகும். தனூர், மீனங்களுக்கு குரு அதிபதி. அவனுடைய திக்கு வடகிழக்கு. அங்கு அவை ப்லவமாகும். மகர, கும்பங்களுக்குச் சனி அதிபதி. அவன் திக்கு மேற்கு அங்கு அவை ப்லவமாகும். ஆகவே ராசிஸ்வாமிக்கு எது திக்கோ அந்த ராசியும், அந்த திக்கைப் ப்லவமாகக்கொண்டதென்பது பெறப்பட்டது. இதிலிருந்து உதயமான ராசி, அதற்குரிய நக்ஷத்திர பாதங்கள் இவைகளைக்கொண்டு, திருடப்பட்டும், நஷ்டப்பட்டும் போனபொருள் இருக்குமிடம், திக்கு இவற்றைக்காணவேண்டும். மற்றும், பிருஹத் ஜாதகம், 1, 2-வது அத்தியாயங்களில் சொல்லியவற்றையும் கலந்துகொண்டு ஊஹித்துப் பலன் சொன்னால் அனுபவத்தில் ஒத்து நடப்பதில் சந்தேஹமில்லை.

இருபத்தாறுவது சுலோகம்

மூ॥ मातरं जठरे मूर्ध्नि गुरुं दक्षिण वामकौ ।
बाहू भ्राताऽथ तत्पत्नी स्पृष्ट्वैवं चौरमादिशेत् ॥ २६ ॥

(ப - ரை) जठरे — வயிற்றைத் தொட்டால், मातरं— திருடினவள் தாயாரென்று அறியவும். मूर्ध्नि — தலையைத் தொட்டால் गुरुम्—குருவைச் சோரனாகவறியவும். दक्षिण

बाहौ—வலது கை தொடப்பட்டால் भ्राता ஸஹோதரன் (திருடன்) என்றும், वामबाहा— இடது கையைத் தொட்டால், तत्पत्नी — அவனுடைய பத்னீ (திருடினவள்) என்றும் அறிந்து கொள்க. (26)

இருபத்தேழு, இருபத்தெட்டாவது சுலோகங்கள்

(அ - கை) திருட்டுப் போனவற்றின் லாபத்தையும், அலாபத்தையும் உபதேசிக்கிறார் :—

मू० ॥ अन्तरङ्गमवमुच्य बाह्यग स्पर्शनं यदि करोति पृच्छकः ।
श्लेष्म मूत्र शकृतस्त्यजत्यथो पातयेत्करतल स्थवस्तु चेत् ॥

मू० ॥ भृशमवनामिताङ्ग परिमोटनतोऽप्यथवा
जन धृत रिक्तभाण्ड मवलोक्य च चौरजनम् ।
हृत पतित क्षतास्मृत विनष्ट विभग्न गतोन्मुषित
मृताद्यनिष्टरवनो लभते न हृतम् ॥ २८ ॥

(ப-ரை) अन्तरङ्गं अवमुच्य —உள்ளிலிருக்கும் அங்கத்தை விட்டு बाह्यगस्पर्शनं — வெளியிலுள்ள அங்கஸ்பர்சத்தை पृच्छकः—கேட்பவன் करोति यदि — செய்தானேயானாலும், அல்லது श्लेष्ममूत्र शकृतः—கபம், மூத்திரம், மலம் இவற்றை அக்காலம் त्यजति यदि—விட்டாலும் अथो—அல்லது करतल स्थवस्तु—உள்ளங்கையிலிருக்கிற பொருளை पातयेत् चेत्— கீழில் போட்டாலும் (நழுவ விட்டாலும்) अथवा—அல்லது भृशं—மிகவும் अवनामिताङ्ग परिमोटनतः — வணங்கும்படி செய்யப்பட்ட அவயவத்தில் 'சட சட' என்ற சப்தத்தை உண்டுபண்ணினாலும், அல்லது जन धृत रिक्त भाण्डं—ஜனங்களால் தரிக்கப்பட்ட வெறும் பாத்திரத்தை अवलोक्य च — பார்த்தாலும், அல்லது, चोरजनं—வேறு திருடனைப் பார்த்தாலும், அல்லது हृत— அபகரிக்கப்பட்டவன், पतित—கீழில்

விழுந்தவன் **क्षत**—காயம்பட்டவன், **अस्मृत**—மறக்கப்பட்டவன், **विनष्ट**—நாசமானவன் (காணுது போனவன்) **विभग्न**—ஒடிந்த அங்கமுள்ளவன் **गत**—ஓடிப்போனவன் **उन्मुषित**—தூக்கிச் செல்லப்பட்டவன். **मृत**—இறந்தவன் இவர்களைப் பற்றிய அநிஷ்டமான கூக்குறல் கேட்கப்பட்டாலும், **हृतं**—திருட்டுப்போன சொத்தை **न लभते** — அடையமாட்டான்.

(குறிப்பு) முற்கூறிய நிமித்தங்கள் காணப்படாவிடில் திருட்டுப்போன பொருளையடைவானெனக் கண்டுகொள்க.

**இருபத்தெட்டரையாவது சுலோகம்**

(அ-கை) பிறகு, வியாதி முதலியவற்ருல் பீடிக்கப் பட்டவர்களின் மரண லக்ஷணத்தை ½ சுலோகத்தினல் சொல்லுகிருர்:—

**மூ॥ निगदितमिदं यत्तत्सर्वं तुषास्थि विषादिकैः**
**सह मृतिकरं पीडार्त्तानां समं रुदित क्षतैः ॥ २८½ ॥**

(ப-ரை) **निगदितं**—'**अन्तरङ्गमवमुच्य**' என்று தொடங்கி நஷ்ட சிந்தையில் **यत्**—எது சொல்லப்பட்டதோ, **तत् इदं सर्वं** — அந்த இவையாவும் **तुषास्ति विषादिकैः सह** — உமி, எலும்பு விஷம் முதலியவற்றுடன் கூட **रुदितक्षतैः समं**—அழுகை, புண் இவற்றுடன் சேர்ந்து காணப்பட்டால் **पीडार्त्तानां**—வியாதி பீடிதர்களுக்கு **मृतिकरम्**—மரணத்தைத் தெரிவிக்கக் கூடியது. மூலத்தில் '**आदि**' என்று கூறியதிலிருந்து '**च्छिन्नं**', '**मृतं**', '**जग्धम्**' சின்னம், ம்ருதம், ஜக்தம், பிடுங்கப்படுதல் முதலிய சப்தங்களாலும் மரணத்தையறியலாகும் என்பது பெறப்படுகிறது. (28½)

### இருபத்தொன்பதாவது சுலோகம்

(அ-கை) பிறகு போஜன ஞானத்தைச் சொல்லுகிருர்:—

மூ॰ ॥ अवयवमपि स्पृष्ट्वाऽन्तःस्थं दृढं मरुदाहरे
दतिबहु तदा भुक्त्वाऽन्नं संस्थितः सुहितोवदेत् ॥ २९ ॥

(ப-ரை) **अन्तःस्थं**—உள்ளிலிருக்கிற **अवयवमपि**—அவயவத்தையும் **स्पृष्ट्वा** — தொட்டுக்கொண்டு **मरुद्** — வாயுவை **आहरेत्**—வெளிப்படுத்திக்கொண்டு கேட்பாளுயின், **तदा**— அப்பொழுது கேட்பவன் **अतिबहु**—மிக்க அதிகமான **अन्नं**— அன்னத்தை **भुक्त्वा** — சாப்பிட்டுவிட்டு **सुहितः** — நன்கு திருப்த்தியை யடைந்தவஞக **संस्थितः** — இருக்கிருன் என **वदेत्**—சொல்லக் கடவது. (29)

### முப்பதாவது சுலோகம்

மூ॰ ॥ ललाट स्पर्शनाच्छूकदर्शनाच्छालिजौदनम् ।
उरःस्पर्शात् षष्टिकाख्यं ग्रीवास्पर्शे च यावकम् ॥ ३० ॥

(ப-ரை) **ललाट स्पर्शनात्**—நெற்றியைத் தொட்டாலும் **शूक दर्शनात्**—சூக தான்யத்தைக் கண்டாலும், **शालिजौदनम्**—சம்பாநெல்லின் அரிசியைச் சாப்பிட்டிருப்பான். **उरः स्पृशति**—மார்பைத் தொட்டால் **षष्टिकाख्यं** — அறுவதாங் குருவை யரிசியைச் சாப்பிட்டிருப்பான். **ग्रीवास्पर्शे**— கழுத்தைத் தொட்டால் **यावकम्**—யவையரிசியைச் சாப்பிட்டிருப்பான். (30)

### முப்பத்தொன்ருவது சுலோகம்

மூ॰ कुक्षि कुच जठर जानु स्पर्शे माषाः पयस्तिल यवाग्वः ।
आस्वादयते चोष्ठौ लिहते मधुरं रसं ज्ञेयम् ॥ ३१ ॥

(ப-ரை) **कुक्षिस्पर्शे**—வயிற்றைத் தொட்டால் **माषाः**—உளுந்தின் வடை சாப்பிட்டிருப்பான். **कुचस्पर्शे** — ஸ்தனத்தைத் தொட்டால் **पयः**—பாலும், சாதமும் (காபி, டீ என்றும் சொல்லலாம்) சாப்பிட்டிருப்பான். **जठर स्पर्शे**—வயிற்றைத் தொட்டால் **तिल**—எள்ளு சாதம் சாப்பிட்டிருப்பான் **जानुस्पर्शे**—முழங்காலைத் தொட்டால் **यवागूः**—கஞ்ஜி குடித்திருப்பான். **ओष्ठौ**—உதடுகளை **आस्वादयते** — 'சூ' கொட்டினுலும் **लिहते च**—நக்கினுலும் **मधुरं रसं**—தித்திப்பான பொருளைச் சாப்பிட்டிருப்பான் என்று **ज्ञेयम्**—அறியவும். (31)

### முப்பத்திரண்டாவது சுலோகம்

மூ॰ ॥ विसृक्के स्फोटये जिह्वामाम्ले वक्त्रं विकूणयेत् ।
कटुकेऽथ कषायेऽथ हिक्केत् ष्ठीवेच्च सैन्धवे ॥ ३२ ॥

(ப-ரை) **विसृक्के** — கடைவாயையோ, **जिह्वां** — நாக்கையோ, **स्फोटयेत्** — நக்கினுலும், சப்திக்கச் செய்தாலும் **आम्लं**—புளிப்பை சாப்பிட்டிருப்பான் **वक्त्रं**—முகத்தை **विकूणयेत्** — கோணலாக வைத்துக்கொண்டால் **कटुके** — உறைப்பான பொருளைச் சாப்பிட்டிருப்பான். **कषाये**—கஷாயத்தைச் சாப்பிட்டிருந்தால் **हिक्केत्**—விக்குவான். **सैन्धवे** — உப்பான பொருளைச் சாப்பிட்டிருந்தால் **ष्ठीवेच्च** — காறி உமிழ்வான். (32)

முப்பத்துமூன்ருவது சுலோகம்

மூ॥ श्लेष्म त्यागे शुष्कतिक्तं तदल्पं
श्रुत्वा क्रव्यादं वा प्रेक्ष्य वा मांसमिश्रम् ।
भ्रूगण्डौष्ठस्पर्शने शाकुनं तद्
भुक्तं तेनेत्युक्तमेतन्निमित्तम् ॥ ३३ ॥

(ப-ரை) **श्लेष्म त्यागे**—கோழை உமிழ்ந்தால் **शुष्कतिक्तं**—உணங்கினதும், கசப்பானதுமான பொருளைச் சாப்பிட்டிருப்பான். **श्रुत्वा**—பிறர் சொல்லக்கேட்டால் **तदल्पं**—முன் சொன்னதை அற்பமாகச் சாப்பிட்டிருப்பான். **प्रेक्ष्य वा**—அங்குமிங்குமாகப் பார்த்தாலும், **क्रव्यादं**—மாம்ஸம் தின்னும் பிராணியையோ **मांसमिश्रं वा** — மாம்ஸம் கலந்த ஆகாரத்தையோ சாப்பிட்டிருப்பான். **भ्रू गण्डौष्ठ स्पर्शने**—புருவங்களையோ, கன்னங்களையோ, உதடுகளையோ தொட்டால் **तद्भुक्तं**—அவன் சாப்பிட்டது **शाकुनम्**—பறவை மாம்ஸமாகும். (33)

முப்பத்துநான்காவது சுலோகம்

மூ॥ मूर्ध गल केश हनु शङ्ख कर्ण जङ्घां वस्ति च स्पृष्ट्वा ।
गज महिष मेष सूकर गो शश मृग महिष मांस युग्भुक्तम् ॥

(ப-ரை) **मूर्ध**—தலையைத் தொட்டால் **गजमांसयुक्**—யானை மாம்ஸம் கலந்ததையும் **गल**—கழுத்தைத் தொட்டால் **महिष**—எருமை மாம்ஸம் கலந்ததையும் **केश**—கேச(தலையிர்)த்தைத் தொட்டால் **मेष**—ஆட்டு மாம்ஸம் கலந்ததையும் **हनु** — மோவாக்கட்டையைத் தொட்டால் **सूकर** — பன்றி

மாம்ஸம் கலந்ததையும், शङ्ख—கழுத்தைத் தொட்டால் गो—பசு மாம்ஸம் கலந்ததையும், कर्ण—காதைத் தொட்டால் शश—முயல் மாம்ஸம் கலந்ததையும், जङ्घा—முழங்காலைத் தொட்டால் मृग—மான் மாம்ஸம் கலந்ததையும், वस्ति—மூத்திராசயத்தை स्पृष्ट्वा—தொட்டால் महिषमांसयुक्—எருமை மாம்ஸம் கலந்ததும் भुक्तम्—சாப்பிடப்பட்டிருக்கும். (34)

முப்பத்தைந்தாவது சுலோகம்

மூ॥ दृष्टे श्रुतेऽप्यशकुने गोधा मत्स्यामिषं वदेद्भुक्तम् ।
गर्भिण्या गर्भस्य च निपतनमेवं प्रकल्पयेत् प्रश्ने ॥ ३५ ॥

(ப-ரை) अशकुने—கெட்ட சகுனமானது दृष्टे—பார்க்கப்பட்டாலும் श्रुतेवा—கேட்கப்பட்டாலும் भुक्तं—ப்ரச்னம் செய்பவன் சாப்பிட்டது गोधा मत्स्यामिषं—உடும்பின் மாம்ஸத்தையோ, மீன் மாம்ஸத்தையோ वदेत्—சொல்லுக. एवम्—இதேமாதிரி, அதாவது—அபசகுனம் காணப்பட்டாலும், கேட்கப்பட்டாலும் गर्भिण्याः—கர்ப்பிணியின் प्रश्ने—கேள்வியில் गर्भस्य—கர்ப்பம் निपतनं—நழுவி (அகாலத்தில் மரித்து) விடும் என்று प्रकल्पयेत्—ஸமர்த்தனம் செய்ய வேண்டும். (35)

முப்பத்தாறுவது சுலோகம்

(அ-கை) கர்ப்பிணிக்குப் பிறக்கும் குழந்தை இன்னதென்பதையும், சுகமான ப்ரஸவத்தையும் சொல்லுகிறார்:—

மூ॥ पुंस्त्री नपुंसकाख्ये दृष्टेऽनुमिते पुरःस्थिते स्पृष्टे ।
तज्जन्म भवति पानान्न पुष्प फल दर्शने च शुभम् ॥ ३६ ॥

(ப-ரை) கர்ப்பத்தினின்றும் என்ன குழந்தை பிறக்கும் என்ற ப்ரச்னத்தில் **पुंदृष्टे**—புருஷன் பார்க்கப்பட்டாலும், **अनुमिते**—ஊஹிக்கப்பட்டாலும் **पुरः स्थिते**—எதிரில் நின்றாலும் **तज्जन्म भवति**—புருஷன் பிறக்கும். இவ்விதமே **स्त्री**—ஸ்த்ரீ பார்க்கப்பட்டாலும், ஊஹிக்கப்பட்டாலும் எதிரிலிருந்தாலும் ஸ்த்ரீ ப்ரஜை பிறக்கும். **नपुंसकाख्ये**—நபும்ஸகமானது பார்க்கப்பட்டாலும், ஊஹிக்கப்பட்டாலும், நேரில் நின்றாலும், நபும்ஸகக் குழந்தை பிறக்கும். ஆனால் **पान अन्न, पुष्प, फलदर्शने** — (அச்சமயம்) மத்யம், அன்னம் (ஆகாராதி), புஷ்பம், பழம் இவை காணப்பட்டால் **तज्जन्म**—அக்குழந்தை பிறத்தல் **शुभम्**—கஷ்டமில்லாதிருக்கும். (36)

முப்பத்தேழாவது சுலோகம்

(அ-கை) கர்ப்ப நிச்சயம் செய்யும் முறையை யுபதேசிக்கிறார்:—

மூ॥ **अङ्गुष्ठेन भ्रूदरं वाऽङ्गुलिं वा**
**स्पृष्ट्वा पृच्छेद् गर्भचिन्ता तदा स्यात्।**
**मध्वाज्याद्यैः हैम रत्न प्रवालै -**
**रग्रस्थैर्वा मातृ धात्र्यात्मजैश्च ॥ ३७ ॥**

(ப-ரை) **अङ्गुष्ठेन**—கட்டை விரலினால் **भ्रू**—இரண்டு புருவங்களையோ, **उदर**—வயிற்றையோ **अङ्गुलिं वा**—விரலையோ **स्पृष्ट्वा**—தொட்டுக்கொண்டு **पृच्छेत्**—கேட்டால் **तदा**—அப்பொழுது அது **गर्भचिन्ता**—கர்ப்பத்தைப்பற்றிய சிந்தையாக **स्यात्**—ஆகும். **मधु**—தேனோ **आज्याद्यैः**—நெய் முதலியனவோ, **हेम रत्न प्रवालैः**—தங்கமோ, ரத்தினமோ,

பவழமோ **मातृ धात्र्यात्मजैश्च** — தாய், வளர்ப்புத்தாய், குழந்தை முதலியனவோ **अग्रस्थैः वा**—எதிரிலிருந்தாலும் அதுவும் கர்ப்பத்தைதப் பற்றிய சிந்தையேயாகும். (37)

முப்பத்தெட்டாவது சுலோகம்

(அ - கை) கர்ப்பம் காணும் முறையையும் அதன் ஸ்ராவங்காணும் முறையையுமுபதேசிக்கிறார்:—

**மூ० ॥ गर्भयुता जठरे करगे स्याद् दुष्ट निमित्त वशात्तदुदासः ।**
**कर्षति तज्जठरं यदि पीठोत्पीडनतः करगे च करेऽपि ॥**

(ப-ரை) **जठरे**—வயிற்றில் **करगे**—கையை வைத்தால் **स्त्री**—ஸ்த்ரீ **गर्भयुता**—கர்ப்பமுள்ளவளாக **स्यात्**—இருப்பாளென்றறிக. **दुष्ट निमित्त वशात्**—காயம், கலக்கம், ஒடிதல், நாசமடைதல், பொசுக்கப்படல், பால் முதலியன இவற்றை அச்சமயம் பார்த்தால் அக்கர்ப்பம் ஸ்ராவமாகிவிடும் என்றறிக. **पीठोत्पीडनतः**—அதே வயிற்றை பலகையைத் தொட்டுவிட்டுப் பிறகு தொட்டாலும் **करे करगेऽपि** — கையைக் கையினல் பிடித்துக்கொண்டு கேட்டாலும் அக்கர்ப்பம் வீணாகிவிடும் என்றறிக. (38)

முப்பத்தொன்பதாவது சுலோகம்

(அ - கை) கர்ப்ப க்ரஹண காலமறியும் முறையையுபதேசிக்கிறார்:—

**மூ० ॥ घ्राणाया दक्षिणे द्वारे स्पृष्टे मासोत्तरं वदेत् ।**
**वामेऽब्दौ कर्ण एवं मा द्विचतुर्घ्नः श्रुतिस्तने ॥ ३९ ॥**

(ப-ரை) घ्राणायाः — மூக்கினுடைய दक्षिणे — வலது பக்க द्वारे—ஓட்டையானது (अङ्गुष्ठेन) स्पृष्टे—கட்டைவிரலால் தொடப்பட்டால் मासोत्तरं वदेत्—ஒரு மாதத்திற்குமேல் கர்ப்பமுண்டாகும் என்க. वामे—இடது பக்கத்து ஓட்டை தொடப்பட்டால் अब्दौ — இரண்டு வருஷங்களுக்குள் கர்ப்பமுண்டாகுமென்க. कर्णे—இவ்விதமே இடது காது தொடப்பட்டாலும் இரண்டு வருஷங்களுக்குள் கர்ப்ப முண்டாகுமென்க. श्रुतिस्पृष्टे—வலது காதைத் தொட்டால் मा द्विघ्नः—மாதத்தை இரண்டால் பெருக்கின, அதாவது:— இரண்டு மாதத்தில் கர்ப்பமுண்டாகுமென்க. स्तने स्पृष्टे— ஸ்தனங்களுள் எதைத் தொட்டாலும் मा चतुर्घ्नः—மாதத்தை நான்கால் பெருக்கின அதாவது:— நான்கு மாதங்களில் கர்ப்பமுண்டாகுமென்றறிக. (39)

நாற்பதாவது சுலோகம்

(அ - கை) பிறக்கும் குழந்தைகளின் கணக்கைத் தெரிவிக்கிறார்:—

மூ० ॥ वेणीमूले त्रीन् सुतान् कन्यके द्वे
कर्णे पुत्रान् पञ्च हस्ते त्रयं च ।
अङ्गुष्ठान्ते पञ्चकं चानुपूर्व्यां
पादाङ्गुष्ठे पार्ष्णि युग्मेऽपि कन्याम् ॥ ४० ॥

(ப-ரை) கேட்கும்பொழுது वेणीमूले—பின்னலின் அடி பாகத்தைத்தொட்டால் त्रीन् सुतान्—மூன்று புத்திரர்கள் என்றும் द्वे कन्यके—இரண்டு பெண்கள் என்றுமறிக. कर्णे—இரண்டு காதுகளும் தொடப்பட்டால் पुत्रान्—புத்திரர்கள் पञ्च—ஐந்து

என்றறிக. हस्ते — இரண்டு கைகளும் தொடப்பட்டால் त्रयम्—மூன்று பிள்ளைகள் என்றும்; अङ्गुष्ठान्ते—கட்டைவிரலில் அடிமுதல் आनुपूर्व्या—முறையே நுனிவரை எங்கு தொட்டாலும் पञ्चकम्—ஐந்து புத்திரர்களென்றறிக. पादाङ्गुष्ठे—கால் கட்டைவிரலிலோ पार्ष्णियुग्मेऽपि — இரண்டு விலாப்புரங்களிலோ தொட்டால் कन्याम्—ஒரு கன்னிகை என்றறிக.

நாற்பத்தொன்ருவது சுலோகம்

மூ॥ सव्यासव्योरुसंस्पर्शे सूते कन्या सुतद्वयम् ।
स्पृष्टे ललाटमध्यान्ते चतु स्त्रि तनया भवेत् ॥ ४१ ॥

(ப-ரை) सव्योरुसंस्पर्शे — வலது தொடை தொடப்பட்டால் कन्यासुतद्वयम् — இரண்டு பெண்ணும் இரண்டு புத்திரனும் பிறக்கும். असव्योरुसंस्पर्शे — இடது தொடை தொடப்பட்டாலும் இதேதான் பலன். ललाटमध्ये—நெற்றியின் நடு (பாகத்தை)வைத் தொட்டால் चतुस्तनया—நான்கு பெண்ணும், நான்கு புத்திரனும் பிறப்பர். ललाटान्ते—நெற்றியின் அந்தம் (ஓரம்) தொடப்பட்டால் त्रितनया — மூன்று பெண்கள் பிறக்கும். (41)

(குறிப்பு) இங்கு "பராசரர்" சில விசேஷம் சொல்லியிருப்பதால், அதை மொழிபெயர்த்து மட்டும் எழுதுகிருேம். அதாவது:—"வயிற்றைத் தொட்டால் அப்பொழுதே கர்ப்பிணீ என்றறிக. கட்டை விரலால் வலது பக்கத்து மூக்கோட்டையைத் தொட்டால், ஒரு மாதத்திற்குள் கர்ப்பக்ரஹணத்தைச் சொல்லுக. இடது பக்கத்தோட்டையை அதே கட்டை விரலால் தொட்டால், இரண்டு வருஷத்திற்

கிடையில் கர்ப்பக்ரஹணம். வலது காதோட்டை தொடப் பட்டால், இரண்டு மாதத்திஞல்; இடது காதோட்டைத் தொடப்பட்டால், இரண்டு வருஷத்திற்குள்; ஸ்தனங்கள் கட்டை விரலாலேயே தொடப்பட்டால் நான்கு மாதங்களி ஞல் கர்ப்பமுண்டென்க. பீடமர்த்தனம் செய்து பிறகு வயிற்றைச் சொறிந்துகொண்டாலும், நுனிக்கையை மற்ருரு நுனிக்கையால் பிடித்துக்கொண்டு கேட்டாலும் ஒடிந்த இரும்பு, கோடறி, இரும்புலக்கை, பாறை, ஜலப் பெருக்கு, அசைதல், கீழில் விழுதல், ஒடிதலைக் காணல், இரைச்சல் இவை அச்சமயம் நேர்ந்தாலும் கர்ப்பம் நழுவி விடும் என்றறிக. அதுபோலவே — அன்னம், பானம், புஷ்பம், பழம், பக்ஷி, இரண்டு காலுள்ளனவும், நான்கு காலுள்ளனவும், மற்றும் ஆண் வகுப்பிற் சேர்ந்தனவுமான வற்றின் பார்வை, சப்தம் இவை நேர்ந்தால் புருஷப்ரஜை என்றும்; முற்கூறியவை பெண் வகுப்பிற் சேர்ந்தனவாஞல் ஸ்த்ரீப்ரஜை என்றும்; அலிவகுப்பிற்சேர்ந்தனவாயின் அலிப் பிறவி என்றுமறிக. மேலும், 8-9-வது சுலோகங்களில் சொன்னபடி புருஷ ஸம்க்ஞகமான அங்கங்களைத் தொட்டால் புருஷப்ரஜையென்றும், ஸ்த்ரீ ஸம்ஞகமான அங்கத்தைத் தொட்டால் ஸ்த்ரீப்ரஜையென்றும், நபும்ஸக ஸம்க்ஞகமான அங்கத்தைத் தொட்டால் நபும்ஸக ப்ரஜை யென்றுமறியவும். மேலும், பின்னலின் அடியைத்தொட்டுக் கொண்டு ப்ரச்னம் செய்தால் அப்பொழுது இரண்டு கன்னிகைகளும், மூன்று பிள்ளைகளும் பிறக்கும். நெற்றியின் நடுவைத் தொட்டுக்கொண்டு கேட்டால் நான்கு குழந்தை களென்றும்; நெற்றியின் அந்தத்தைத் தொட்டுக்கொண்டு

கேட்டால் மூன்றென்றும்; காதுகளைத் தொட்டால் ஐந்து குழந்தைகளென்றும்; வலது தொடையைத் தொட்டுக் கொண்டு ப்ரச்னம் செய்தால் இரண்டு பெண்ணும், இரண்டு ஆணுமென்றும்; இடது தொடையைத் தொட்டுக்கொண்டு ப்ரச்னம் செய்தால் மூன்று பெண்ணும், இரண்டு ஆணுமென்றும்; கால் கட்டைவிரலைத் தொட்டால் ஒரே பெண் என்றும்; இரண்டு பக்கங்களைத் தொட்டாலும் ஒரே பெண் தான் பிறக்கும் என்றும் சொல்லவேண்டும்," என்று சொல்லியிருக்கிறார் என்றும்.

நாற்பத்திரண்டு, நாற்பத்துமூன்றாவது சுலோகங்கள்

(அ-கை) கர்ப்பிணிக்கு எந்த எந்த நக்ஷத்திரங்களில் குழந்தை பிறக்கும் என்பதை இந்த இரண்டு சுலோகங்களினாலுமுபதேசிக்கிறார்:—

மூ॥ शिरो ललाट भ्रू कर्ण गण्डं हनु रदा गलम् ।
सव्यापसव्य स्कन्धश्च हस्तौ चिबुक नालकम् ॥ ४२ ॥

उरः कुचं दक्षिणमप्यसव्यं
हृत्पार्श्वमेवं जठरं कटिश्च ।
स्फिक् पायु सन्ध्यूरु युगं च जानू
जङ्घेऽथ पादाविति कृत्तिकादौ ॥ ४३ ॥

(ப-ரை) கேட்கும்பொழுது கர்ப்பிணியானவள் शिरः— தலையைத்தொட்டால், கிருத்திகையில் பிரசவிப்பாள். ललाट—

நெற்றியைத்தொட்டால், ரோஹிணியிலும்; भ्रुवौ—புருவங் களைத் தொட்டால், மிருகசீர்ஷத்திலும்; कर्ण—காதுகளைத் தொட்டால், திருவாதிரையிலும்; गण्डयोः—கன்னங்களைத் தொட்டால் புனர்பூசத்திலும்; हनु—மேல் வாய்க்கட்டையைத் தொட்டால் புஷ்யத்திலும்; रदा — பற்களைத் தொட்டால் ஆயில்யத்திலும்; गल—கழுத்தைத் தொட்டால் மகத்திலும்; सव्यस्कन्ध—வலது தோளைத் தொட்டால் பூரத்திலும்; अपसव्यस्कन्ध—இடது தோளைத் தொட்டால் உத்திரத்திலும்; हस्तौ—கையைத் தொட்டால் ஹஸ்தத்திலும்; चिबुक—கீழ் வாய்க்கட்டையைத் தொட்டால் சித்திரையிலும்; नालके—கழுத்தில் தொட்டால் சுவாதியிலும்; उरः — மார்பைத் தொட்டால் விசாகத்திலும்; कुजं दक्षिणं — வலது ஸ்தன ஸ்பர்சத்தால் அனுஷத்திலும்; कुजं असव्यं—இடது ஸ்தன ஸ்பர்சத்தால் கேட்டையிலும்; हृत्—ஹ்ருதயத்தைத் (மார்க் குழி) தொட்டால் மூலத்திலும்; पार्श्वं — வலது (விலா) பக்கத்தைத் தொட்டால் பூராடத்திலும்; पार्श्वं — இடது (விலா) பக்கத்தைத் தொட்டால் உத்திராடத்திலும்; जठरे—வயிற்றில் தொட்டால் திருவோணத்திலும்; कटिःच—இடுப்பில் தொட்டால் அவிட்டத்திலும்; स्फिक्पायुसन्धौ — ஸ்பிக் என்ற குதத்தின் ஸந்தியில் தொட்டால் சதயத்திலும்; दक्षिणोर्वी — வலது தொடையில் தொட்டால் பூரட்டாதி யிலும்; वामोर्वीम्—இடது தொடையில் தொட்டால் உத்தி ரட்டாதியிலும் जान्वोः—முட்டிக்காலில் தொட்டால் ரேவதி जङ्घयोः—கணுக்காலில் தொட்டால் அசுவதியிலும்; पादयोः—கால்களில் தொட்டால் பரணியிலும் பிரஸவிப்பாள் எனக் கண்டறிந்து சொல்லவேண்டும். (42, 43)

நாற்பத்துநான்காவது சுலோகம்

(அ-கை) இந்த அங்கவித்யையை முடிக்கிறார்:—

மூ॥ इति निगदितमेतद् गात्रसंस्पर्श लक्ष्म
प्रकटमभिमताप्त्यै वीक्ष्य शास्त्राणि सम्यक् ।
विपुलमतिरुदारो वेत्ति यः सर्वमेत —
न्नरपति जनताभिः पूज्यतेऽसौ सदैव ॥ ४४ ॥

(ப-ரை) एतद्—இந்த गात्रसंस्पर्शलक्ष्म—அவயவத்தைத் தொடுதல் ரூபமான சாஸ்திரமானது शास्त्राणि—'கர்க்கர்', 'பராசரர்' முதலியோர் செய்த சாஸ்திரங்களை संयक्—நன்றாக वीक्ष्य—ஆலோசித்தறிந்து अभिमताप्त्यै—இஷ்ட ப்ராப்திக்கு வேண்டி प्रकटम्—மிகத்தெளிவாக इति—இவ்விதம் निगदित्तम्—சொல்லப்பட்டது. एतत् सर्व—இவை யாவையும் विपुलमतिः—விரிந்தபுத்தியுள்ளவனும், उदारः—கம்பீர ஸ்வபாவமுள்ளவனுமான यः—எவன் वेत्ति—அறிகின்றானோ असौ—இவன் नरपति-जनताभिः—அரசர்களாலும், ஜன ஸமூகங்களாலும் सदा एव—எப்பொழுதுமே पूज्यते—பூஜிக்கப்படுவான். (44)

இவ்விதம் "வராஹமிஹிராசாரியரால்" செய்யப்பட்ட "பிருஹத் ஸம்ஹிதை"யிலுள்ள 50-வது அத்யாயமான "அங்கவித்யா" என்ற அத்தியாயம் முற்றிற்று.

ओं नमो भगवते राधाकृष्णाय ॥

சுபம்